பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**18 11 2025 TUESDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

1) பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை கோவையில் இயற்கை வேளாண் மாநாட்டை தொடங்கிவைக்கிறார்.

2) உலக அளவில் தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணி நாடாக வளர்ந்து வருவதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

3) வேளாண் விளைப்பொருட்களுக்கான மதிப்பு கூட்டு மையங்களை அமைக்க விரும்பும் தொழில்முனைவோர் அரசின் மானிய உதவியை பெற்றுக்கொள்ளலாம் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

4) மதுரை, தேனி, தென்காசி உள்ளிட்ட 11 மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5) ஆஸ்திரேலிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

கோவையில் இயற்கை வேளாண் மாநாட்டை பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை தொடங்கிவைக்கிறார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், இந்நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின்கீழ், 21-வது தவணைத்தொகையை பிரதமர் விடுவிக்க உள்ளதாக தெரிவித்தார்.

*(Voice Byte — எல். முருகன் - 60 Sec.)*

<<<<<<>>>>>>

உலக அளவில் தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணி நாடாக வளர்ந்து வருவதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இந்திய தொழில் வர்த்தக சங்கங்களின் வருடாந்திர கூட்டத்தின் முன்னோடியாக இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கு மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

வளமான, வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதற்கு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று கூறிய அவர், இதற்காக

பணியாளர்களுக்கு திறன் பயிற்சி அளிப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இந்தியா தற்போது நான்காவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்துள்ளதாக கூறிய திரு பியூஷ் கோயல், இன்னும் இரண்டாண்டுகளுக்குள் மூன்றாவது பெரிய பொருளாதார சக்தியாக மாறும் என்றும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

வேளாண் விளைப்பொருட்களுக்கான மதிப்பு கூட்டு மையங்களை அமைக்க விரும்பும் தொழில்முனைவோர் மற்றும் நிறுவனங்கள் அரசின் மானிய உதவியை பெற்று பயனடையுமாறு மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, வேளாண் அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 100 மதிப்புக்கூட்டு மையங்களுக்கு ஒன்றரை கோடி ரூபாய் வரை மானிய உதவி வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதுதவிர, ஐந்தாண்டுகளுக்கு, ஐந்து சதவீத வட்டி மானியமும், வேளாண் கட்டமைப்பு நிதித் திட்டத்தின்கீழ், மூன்று சதவீத வட்டி மானியமும் வழங்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே, மத்திய — மாநில அரசுகளின் பிற திட்டங்களின்கீழ் நிதியுதவி பெற்ற பயனாளிகளும் இத்திட்டத்தில் பயன்பெறலாம் என்றும் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட தமிழகத்தை சேர்ந்த மூன்று மீனவர்கள் தஞ்சாவூர் மல்லிப்பட்டினம் கடற்கரைக்கு இன்று வந்தடைந்தனர்.

தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரத்தை சேர்ந்த இந்த மீனவர்கள் கடந்த அக்டோபர் 15-ஆம் தேதி சர்வதேச எல்லையை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் அவர்களை கைது செய்தனர்.

பின்னர் கடந்த நான்காம் தேதி இலங்கை நீதிமன்றம் இந்த மீனவர்களையும், அவர்களது படகையும் விடுவித்து உத்தரவிட்டிருந்தது

இந்நிலையில், இலங்கை கடற்படையினர் இந்த மீனவர்களையும், அவர்களது படகையும் இந்திய கடலோர காவல்படையிடம் ஒப்படைத்தனர்.

இவர்களை மல்லிப்பட்டினம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் இந்திய கடலோர காவல்படை ஒப்படைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

மதுரை, தேனி, தென்காசி உள்ளிட்ட **11** மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களில் கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

***(Voice Byte — செந்தாமரை கண்ணன் — 58 Sec.)***

இதனிடையே, சென்னை உட்பட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது.

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தென்காசி மாவட்டம் சங்கரன் கோவிலில் **48** கோடி ரூபாய் மதிப்பிலான வங்கிக் கடன் உதவிகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் பயனாளிகளுக்கு இன்று வழங்கினார்.

---------------

பெரம்பலூர் மாவட்ட கூட்டுறவு துறையின் சார்பில் நடந்த 72-ஆவது அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் அமைக்கப்பட்டிருந்த விற்பனை கண்காட்சியினை மாநில அமைச்சர் திரு சிவசங்கர் இன்று பார்வையிட்டார்.

-----------

விழுப்புரம் மாவட்டம் வீடுர் அணை நீர்த்தேக்கத்திலிருந்து திண்டவனம் மற்றும் வானூர் வட்ட பகுதிகளுக்கு நாளை முதல், 135 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

----------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் யோகா பயிற்சியாளர் பணிக்கு நாளைக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

----------------

சேலத்தில் பெண்களின் பாதுகாப்பிற்காக 24 மணிநேரமும் கண்காணிப்புப்பணிகளை மேற்கொள்ள இளஞ்சிவப்பு பாதுகாப்பு வாகன சேவையை மாநகர காவல் ஆணையாளர் திரு அனில் குமார் கிரி இன்று தொடங்கிவைத்தார்.

--------------------

திருப்பூர் மாவட்டம் உடுமலை, திருமூர்த்தி மலை, பஞ்சலிங்க அருவிக்கு நீர்வரத்து அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்படும் வாய்ப்புள்ளதால் பாதுகாப்பு கருதி, பக்தர்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

--------------

திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விருதுநகர் மாவட்டங்களில் போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இன்று நடைபெற்றன.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆஸ்திரேலிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

சிட்னியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை **25-23, 21-16** என்ற செட் கணக்கில், தைவானின் **Ko Chi Chang — Li Wei Po** இணையை வென்றது.

-------------

கோவையில் நடைபெற்றுவரும் தமிழக அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டநேர

இறுதியில் உத்தரப்பிரதேச அணி முதல் இன்னிங்சில் **6** விக்கெட் இழப்பிற்கு **339** ரன் எடுத்துள்ளது.

தமிழக அணியின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் **455**

------------

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sonal Patil** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **6-2, 6-2** என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Ashmitha Easwaramurthy** -ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில், இந்தியாவின் அதிதி ராவத் — தாய்லாந்தின் **Chotirin-**வை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

<<<<<<**END**>>>>>>